Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி ௵ ஆனி மீ கஉ வெள்ளிக்கிழமை (22 JUNE 1956) [இல - கக]

# கற்பின் சிறப்பு கண்ணகி வழிபாட்டுக்கு ஏது

## தமிழ் இலக்கியம் காட்டும் உண்மைகள்

சோழநாட்டின் தலைநகராம் காவிரிப்பூம் பட்டினத்து மாநாய்கன் எனும் பெயர் பூண்ட பெருங்குடி வணிகன் ஒருவன் இருந்தான். கண்ணகி என்பாள் அவனுடைய புதல்வி. ஆசிலாக் கற்பும், நற்பண்பும், ஒழுக்கமும் பூண்டவள். இவரின் காலில் இரு சிலம்புகளுண்டு. இக் காற்சிலம்பே இச்செந்தமிழ் இலக்கியத்துக்கு 'சிலப்பதிகாரம்' என்னும் பெயரைத் தந்தது அந்நகரிலேயே செல்வமும் பெருமாண்பும் உள்ள, "ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி" யில் உதித்த 'மாசாத்துவான்' என்பான் இருந்தான். இவனுக்கு கோவலன் என்று பெயர் உள்ள ஒரு புதல்வன் உளன். அறிவாலும் குணத்தாலும் புகழ்பெற்று விளங்கினன் இக்கோவலன். பிறர்க்குத் தன்னால் இயன்ற உதவி புரியும் பெருங்குணம் படைத்தவன்.

இவ்விருவரின் பெற்றோரும் நல்லோரையில் கோவலனுக்குக் கண்ணகியைக் கடிமணஞ் செய்து களிக்க எண்ணினார்கள். நகர மக்கள் அனைவருக்கும் அறிவித்தனர். திருமணத்திற்காக அமைத்திருந்த நன்னாளில் மங்கள ஒலிகள் ஆர்ப்ப, மணக்கோலம் காண நின்றவர்கள் வாழ்த்த,

"மாலைதாழ் சென்னி வயிர
மணித் தூணத்து
நீல விதானத்து நித்திலப்
பூம் பந்தர்க்கீழ்"

கண்ணகியைக் கோவலன் முறைப்படி மணஞ் செய்தான். காதலர் இருவரும் மலரும் மணமும் போன்று ஒன்றித்து அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல் முதலிய தருமம் செய்து, இல்லறமென்னும் நல்லறத்தை சில ஆண்டுகளாக இனிது நடத்தி வந்தார்கள்.

காவிரிப்பூம் பட்டினத்தில் கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி என்பாள் ஆடல், பாடல் அழகில் சிறந்து விளங்கினாள். விருப்பின்படியே இசைவல்லுநர், யாழாசிரியர், கலையார்வம் மிக்கோர், கற்றோர் நிறைந்த சபையில் அரசன் முன்னிலையில் அபிநயத்துடன் நாட்டியமாடிக் காட்டினள். அதனால் அரசனிடம் பச்சை மாலையும் பட்டமும் பெற்றதுடன் ஆயிரத்தெண் கழஞ்சு பொன்பரியம் பெற்றாள். "மாற்றுயர்ந்த பசும்பொன்னை விலையாகப் பெறுதற்குரியது இம்மாலை; இதற்குரிய பொன்னைத் தந்து வாங்குவோன் என் காதலனாக அமைவான்" எனக் கூறித் தோழியிடம் மாலையைக் கொடுத்தனுப்பினள். மாதவியின் ஆடலிலும் பாடலிலும் அழகிலும் மயங்கிய கோவலன் உரிய விலை கொடுத்து மாலையை வாங்கி மாதவியை மணந்து அவளுடன் வசித்து வந்தான். மாசிலாக் கற்புடைய மனைவியாம் கண்ணகியையும் மாளிகையையும் மறந்தான். இவர்கள் இங்கு இன்பமனுபவிக்க, கண்ணகி கணவனைப் பிரிந்ததனால் உண்டாய துயரத்தினால் மங்கள அணியேயன்றி ஏனைய அணிகளை நீக்கி, கண்ணீர் சிந்தி, இரவும் பகலும் உறக்கமற்று வருந்திய உள்ளத்துடன் உயிர் வாழ்ந்தாள். கணவனையோ அன்றேல் மாதவியையோ குறை கூறவில்லை அவள்.

திரு ப. இ. தேவராசா
கொழும்பு

இப்படியிருக்கையில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரனுக்கு விழாக் கொண்டாடும் நன்னாள் வந்தது. மறக்குலப்பெண்கள் பொங்கல் முதலியவற்றைப் படைத்து,

தொடர்ச்சி 3ம் பக்கம்

# தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிர்ப்பு

## யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டம்

எல்லாக் கட்சியினரும் சேர்ந்த பொதுக் கூட்டம் ஒன்று யாழ்ப்பாணம்முற்றவெளியில் யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் திரு. எஸ். எஸ். நவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம், வி. ஏ. கந்தையா, எஸ். ஆர். கனகநாயகம், பி. கந்தையா முதலிய பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

திரு. பொன்னம்பலம் பேசும்போது இலங்கையின் ஐக்கியம் நிலவவேண்டுமேயானால் தமிழ்மொழி சமஅந்தஸ்துப்பெறவேண்டும் தனிச் சிங்களச் சட்டம் கையாளப்படவேண்டுமானால் இலங்கை இருநாடுகளாகப் பிரியநேரிடும். இந் இந்தியாவின் மத்திய அரசாங்க ஆட்சிமொழியாக ஹிந்தி பிரகடனம் செய்யப்பட்டிருப்பது உண்மையே. ஆனால் அது கையாளப்படுவதைத் தாமசப்படுத்த வேண்டுமென்று தமிழ்த் தலைவர்கள் கேட்டுக் கொண்டபடி பண்டித நேரு அவர்கள் அது கையாளப்படுவதைத் தடைசெய்திருக்கின்றார் என்று குறிப்பிட்டபின் சிங்கள மக்கள் முன்னணியார் பண்டித நேருவிலும் பார்க்கப் புத்திசாலிகளா? என்று வினவினர்.

ஆனி 5-ந்திகதி சத்தியாக்கிரகிகளுக்குச் செய்யப்பட்ட துர்ச்செயல்களைக் கண்டித்தும் அவர்களைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது என்றும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

அரசியல் அலை.

# அடாத்துக்கும் அட்டூழியத்துக்கும் தலை குனியும் அரசாங்கம்!

## கல்லோயாவிற் கலவரமா பஞ்சமா பாதகப் படையெடுப்பா ?

### முழுப்பழியை மூடிமறைப்பது முறையாமோ

சிக்காக்கோவிலே தேடிப் பார்த்தாலும் அம்பாரையில் அட்டூழியம் நடத்திய நர மிருகங்களைப்போற் காண முடியாது. காட்டெருமைகள்கூடச் சிறிது கண்ணியமாய் நடந்து கொள்ளும். ஆனால் அம்பாரையில் அட்டூழியஞ் செய்தவர்களுக்கு ஒப்பாக அறிவில்லாத விலங்குகளும இருக்க மாட்டா. பஞ்சமா பாதகங்கள் எல்லாம் ஒருங்கு திரண்டு உருவெடுத்த படுபாவிகளின் நிட்டூரம் நடந்து முடியுமவரைக்கும் தனிச் சிங்கள அரசாங்கம் தன் பாட்டில் இருந்தது என்றால் அதன் கருத்தென்ன?

செய்தித்தாள்களும்எடுத்துப் பிரசுரிக்க முடியாத செய்திகள் அம்பாரையில் நிகழ்ந்தனவென்றால் கல்லோயா மனிதர்கள் வாழும் நாடா அல்லது பைசாசங்கள் உறையும் பள்ளத்தாக்கா என்றே எண்ண வேண்டியிருக்கின்றது.

மறைவாக எல்லா ஆயத்தங்களையும் செய்துவிட்டுத் திடீரென ஒன்றுமறியாதவர்களைத் தாக்கி அவர்களுக்கு உலகறியாத உபத்திரவங்களைச் செய்வதற்கு எந்தநாட்டிலும் இடமிருக்குமா?

குடிக்கும் தண்ணீர்க் குழாய்களை இடித் துடைத்து விட்டு போக்குவரத்து வசதிகளை ஒதுக்கி விட்டுத் தமிழ் பேசும் மக்களைத் தனித்தனியாக வைத்து நூற்றுக் கணக்கானவர்கள் பைசாசங்கள் போலத் தாக்கினார்களாம். இதற்கு மேல் இங்கே விபரங்கள் எழுதுதல் பொருத்தமாகாது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# சபாபதி நாவலரின் சிறந்த தொண்டு

## திருநாளைக் கொண்டாடி ஞாபக மண்டபம் அமைத்தல் கடன்

இப்பெருந்தகையார் யாழ்ப்பாணம் வடகோவையிலே சைவவேளாளர் குலத்தில் சுயம்புநாதபிள்ளை அவர்களுக்கு அருந்தவப் புதல்வராகப் பிறந்தவர்கள். தென்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலமை படைத்தவர்கள். ஆங்கிலப் பயிற்சியுமுண்டு. அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள்; தமிழ்நாட்டில்சைவசித்தாந்தம் தழைத்தோங்கச் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் இவரது புலமையையுணர்ந்து சிதம்பரம்சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராகக் கடமையாற்றும்படி நியமனம் செய்தனர்.

எழுதியவர்:
செ. கோவிந்தசாமி அவர்கள்

இவர் அங்கு தலைமையாசிரியராகக் கடமையாற்றிய பின் திருவாவடுதுறையாதீனம் சென்று அவ்வாதீனம் பதினாறாவது சந்நிதானமாய் விளங்கிய ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிக சுவாமிகளிடம் ஞானதீக்கை பெற்றனர். பின்பு பன்னிரண்டு வருடகாலம் சமய சாஸ்திரங்களையெல்லாம முறையாகக் கற்று வல்லராகிச் சித்தாந்த சாகரமாய் அவ்வாதீன வித்துவசிரோன்மணியாய் விளங்கினர். அவையிலிருந்து கேட்போர் மகிழப்பேசும் உரை வன்மையினையும் மாயாவாதம் முதலிய சமய வாதிகளையெல்லாம் வாயடங்கச் செய்யும் நியாயவாத வன்மையினையும் நோக்கி இவருக்கு நாவலர் என்னும் சிறப்புப் பெயரை மனமகிழ்ந்து அவ்வாதீனத்துச் சுப்பிரமணிய தேசிகர் அளித்தனரென்றும், அதனை அநுவதித்து

தொடர்ச்சி 6-ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்.

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஞு ஆனி மீ ௯ உ வெள்ளிக்கிழமை

## நெறிமுறை நியாயம் ஒன்றுமில்லையா ......?

அரசியல் வாழ்க்கையிற் புகுந்த அன்றே முதல் அமைச்சராய் அமர்ந்துவிடவேண்டுமென்று அல்லும் பகலும் அவாவிக்கொண்டிருந்த திரு. பண்டாரநாயகவுக்கு ஊழ்வினை வந்து உகுத்த காலே அப்பதவியும் கிடைத்தது. அதைத்தொடர்ந்துள்ள அசம்பாவிதங்களும் எழுந்து விட்டன.

கல்லோயாவிற் காதகர்களின் பழிபாதகச் செயல்களைக் கண்ணுற் பார்த்து கழிவிரக்கம் எய்தவேண்டாம். நாட்டின் நிலைமை இவ்வாருய்விட்டதே. இதன் காரணமென்ன? யார் பொறுப்பாளிகள். அல்லற்பட்டோருக்கு ஆதரவு கொடுபடுகின்றதா என்ருவது புதுமையிற் பெருமை கொள்ளும் பிரதமர் எண்ணினரா?

வீடிழந்துவேலையற்றிருப்போர் தொகையென்ன, காட்டில் வழியிழந்து ஒரு கரையுங் காணுது உயிராபத்தி லிருப்பவர்கள் எண்ணென்ன. நாட்டிற் கதியின்று நடைமெலிந்து அல்லற்படுவோர்கள் எத்தனை என்றெல்லாம ஆராய்ந்து செய்ய வேண்டியவற்றை மறந்து கடல்கடந்து முதலமைச்சர் மாநாட்டில் முன்னின்று புகழ் மாலையை நாடிச் செல்லும் அமைச்சரா அமைச்சர்? நாடாளுங் கோமான்? அமைதி கொணர்ந்த அரசியற்றலைவன்?

கொடுங்கோன் மன்னர்கள் தங்கள் கெடுமதியால் முற்காலத்தில் முடிதுறந்ததுமன்றிப் பழிவாங்கப்பெற்றூர்கள் என்றும் வரலாறுகள் வரைந்திருக்கின்றன. சர்வாதிகாரிகளும் இவ்வாறே சாய்ந்து ஒழிந்து போனூர்கள். இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் சனநாயகப் போர்வையிலே தோற்றமளிக்கும் ஒரு பிரதமர் நாட்டிற் பயங்கரமும் பழிகளும் கொள்ளையடித்தலும் கொலைசெய்தலும் மலிந்து இன வெறி இரத்தக்கொதிப்பு அதிகரித்திருக்கும் வேளையில் புறநாடுசென்று கூட்டங் கூடுவது முறையென்று நினைக்கின்ற திரு பண்டாரநாயகமீது நம்பிக்கையில்லை யென்று மக்கள் சார்பாகப் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்கள் உடனே அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அவசர நிலைமை ஏற்பட்டிருக்கின்றமையாற் பாராளுமன்றம் காலதாமதமின்றிக் கூட்டப்படுதல்வேண்டுமென்றும் அங்கு நாட்டின் குழப்பங் காரணமாக இப்பொழுதுள்ள அரசாங்கம் விலகுதல் வேண்டும் என்றும் எடுத்துக் காட்டுதல் அவசியம் ஆகும்ம்.

நெஞ்சில் ஒரு கடுகளவேனும் நாணமின்றிப் பிரதமர் பண்டாரநாயக கதிரை மலைக் கோயிலில் நின்று அமைதி கொணர்ந்தேன் அளவிறந்த செழிப்பை உண்டாக்கினேன் எனக் கூறுகின்ருரே. இந்தப் போலிக் கூற்றைக் கண்டு யார் சிரியார்? யார் நகையார்? யார் எள்ளி இகழ்ந்துரையார்? கட்டுக்கடங்காது காவலுக்குட்படாது திரிகின்ற கயவர்கள் பொதுசனங்களைத் துன்புறுத்துதல் அமைதி நிலையென்று நினைத்து விட்டார் போலும் முதலமைச்சர். தேர்தற் பொழுதிற் சொன்ன சொன்ன சொற்களை மாற்றி அமைச்சுப் பொறுப்பேற்ற வேளையிற் கொடுத்த உறுதி மொழிகளை ஒருபுறம் ஒதுக்கி விட்டுப் பாராளுமன்றத்திற் பலகாலும் ‘என்னை நம்புங்கள்’ என்று அடிக்கடி அரற்றியவற்றையெல்லாம் அடியோடு மறந்து நிற்கும் ஒருவரா, இந்நாட்டை ஆளும் ஆற்றல் உடையவர் தகுதி வாய்ந்தவர் என்று நாம் கேட்கின்ருேம்.

# வாழ்க்கை வானில்

— வளர்பதி

### அமைதி கொணர்ந்தாராம் முதல் அமைச்சர்!

கதிர்காமத் திருத்தலத்துக்குப் புதிய பிரதமர் யாத்திரை செய்து நேர்த்திக்கடன் முடித்தாராம். பிரதமராக வந்து நாட்டில் நன்மையும் செழிப்பு அமைதியும் நிலைநாட்டுவதுதான் அவரின் நேர்த்திக்கடன். இதுபூர்த்தியாய் விட்டதாம். பழைய கட்டுக் கதைகள் பேசும் கிழவிகள்கூட இந்த விதமாகக் கதை கட்டமாட்டார்கள். நாட்டிற்கு நன்மை: கொழும்பிற் கலவரம்: செழிப்பு; கொள்ளையடித்துக் கடைச் சாமான்கள் திருடப்படுதல்; அமைதி: அம்பாறையில் அடிதடியும் அநியாயமும் மனித சஞ்சாரஞ் செய்யமுடியாத மனப்பீதியும்.

x x x

### தவங் கிடந்து அவஞ் செய்தாரா?

பிரதமர் பண்டாரநாயக கிறீத்தவராய் அரசியல் நோக்கிப் புத்தராஞலும் புத்தமதப் போக்கில் மிக ஈடுபட்டிருக்கின்ருராம். தவங்கிடந்தார் முதலமைச்சராய் வர. அவ்வாறுபதவி ஏற்று ஆறு கிழமைகளுக்குள் அவம் செய்து முடித்ததுமன்றி அவலங் கொணர்ந்துவிட்டுக் காரியம் முடித்திருக்கின்ருர் என்றே கூறுதல்வேண்டும்.

x x x

### பாராளுமன்றத்திற் பேச்சு மாணிக்க கங்கைக் கரையிலுமா ... ...?

பாராளுமன்றத்திலே என்னை நம்புங்கள் எல்லாம் நன்மையாய் முடியும் என்று பலமுறை சொல்வதுபோல மாணிக்க கங்கைக் கரையிலும் கந்தப்பெருமானை நம்பச் சொல்லிக் கேட்கின்ருரா திரு பண்டார நாயக? கதிர்காமஞ் செல்வதன் முன் கல்லோயாவிற்போய் கயவர்களின் கண்ணியத்தைக் கண்ணுற் பார்த்திருக்கலாமே. அப்பொழுது அன்னருக்கு விளங்கியிருக்கும் தான் கொணர்ந்த அமைதியின் அமைவு.

x x x

### இலங்கையிலா இங்கிலாந்திலா இவருக்கு வேலை இப்பொழுது?

பல்லாண்டுகளாய்ப் பாடுபட்டுப் பல முட்டுக்கட்டைகளையும் தோல்விகளையும் பல்லைக்கடித்துச் சகித்துக் கடைசியிற் பிரதமரான திரு. பண்டாரநாயகவுக்குப் புறநாட்டுப் பிரயாணமும் வேறு நாட்டமைச்சர்களுடன் பேச்சு வார்த்தைகளும் மிகப்பிரேமை கொடுக்கின்றன. ஆனல் இங்கே கல்லோயாவிலும் கொழும்பிலும் இன்னமும் சிங்கள தமிழ் உள்ளன்பும் நம்பிக்கையும் மறுபடியும் உண்டாகவில்லை. எப்பொழுது மறுபடியும் குழப்பம் வருமோ என்று சொல்ல முடியாதவாறு வதந்திகள் அடிபடுகின்றன. இந்த அவசியத்துக்குள் இங்கிலாந்துக்கு என்ன அவசரமாய் இவர் செல்கின்ருர்.

## திருக்கேதீச்சர மஹா சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

நிகழும் ஆனி மீ 14-ந்உ (27-6-56) புதன் கிழமை திருக்கேதீச்சரப் பெருமானுக்கும் கௌரிநாயகி அம்மையாருக்கும் மஹா கும்பாபிஷேகமும் நிகழும். மாலை மேளக் கச்சேரியும், தேவார பாராயணங்களும், சைவப்பிரசங்கங்களும் இரவு சுவாமி திருவீதிஎழுந்தருளும் மணவாளக் கோல உற்சவமும் நடைபெறும். என்று திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைக் காரியதரிசி அறியத் தருகின்றனர்.

## கைதிகளாயினர் காந்திகள்

மேற்கு எல்லைப் புறக் காந்தி கான் அப்துல்காபர் கானும், பாகிஸ்தான் காந்தி அப்துல் சமத்கானும் மேற்குப் பாக்கிஸ்தான் அரசாங்கத்தால் கைதிகளாக்கப் பட்டனர். அரசாங்கத்தை எதிர்த்தும் மற்ருெரு அரசாங்கம் அமைக்க முயற்சித்தும் பிரசாரம் செய்கிருர்கள் என்பது இவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டு.

## இந்தியப் பத்திரிகையின் எச்சரிக்கை

உள்நாட்டுச் சிக்கல்கள் எத்தன்மையவாயிருந்தாலும் தமிழ் மக்களுக்கெதிரான கொள்கையை பண்டார நாயக அரசாங்கம் தொடர்ந்து கையாளுமாஞல் அது ஓர் பேராபத்தான பிழையைச் செய்வதாகும். தமிழ் மக்களுக்கு ஸ்ரீ பண்டார நாயக பல உறுதி மொழிகளைக் கூறியிருக்கின்ருர். ஆனல் பாராளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்ட வாதம் தொடங்கிய பொழுது வெளியில் உண்டான கொடிய ஆர்ப்பாட்டச் செயல்கள் தமிழ் மக்களை வெறும்வாக்குறுதிகள் திருப்தி பண்ணமாட்டா என்பதை வெளியாக்கி விட்டன என்று பம்பாயில் வெளிவரும் “பிறீ பிறெஸ் ஜேணல்” என்ற பத்திரிகை பண்டாரநாயக அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

## மயிலிட்டி தெற்கு ஸ்ரீ வீரபத்திர சிவன்கோயில் எழுந்தருளிப் பிரதிட்டை

நிகழும் ஆனி மீ 7 ந் திகதி புதன்கிழமை காலை கடக லக்கின முகூர்த்தம் பொருந்திய விசாக நட்சத்திரத்தில் 9 மணிக்கு மேல் நவமாக எழுந்தருளப்பண்ணிய ஸ்ரீ பத்திரகாளியம்பாள் சமேத வீரபத்திரப் பெருமானை வேதசிவாகம முறைப்படி அபிடேகம் முதலிய கிரியைகள் செய்து பிரதிஷ்டை செய்தனர். ஸ்ரீ கணேசதேசிகக் குருக்கள் ஆசாரியராக இருந்து கிரியைகள் நடாத்தினர்.

# பத்து நாள் பால் கறவாது விடுக

## பசுக்கன்று சமர்ப்பித்த விண்ணப்பம்

திரு. ஆ. சபாரத்தினம்
நாரந்தனை, ஊர்காவற்றுறை

ஒருமுறை ஆங்கீரசரிஷிகள் சத்திர யாகம் செய்தார்கள். யாகத்துக் குரிய பசு யாகத்துக்கு வேண்டிய பாலைக் கொடுத்தது.

அக் காலத்தில் பஞ்சம் உண்டாயிற்று. பசு உண்பதற்குப் புல்இல்லை. சோமபானம் செய்யும் செடியையே அதற்கு உணவாகக் கொடுக்க வேண்டியதாயிற்று.

அதன் துன்ப நிலையைக் கண்டு இஷிகள் சிந்தித்தார்கள். யாகத்துக்குப் பால் தரும் பசுவுக்குப் போதிய உணவு அளிக்க இயலவில்லையே; சத்திர யாகத்தை நாங்கள் எப்படி இயற்றுவோம்”.

இங்ஙனம் சிந்தித்தஅவர்கள் தம் சத்தியினல் பெருமழை பொழியச் செய்தார்கள். அதன் பயனகப் பூமி பச்சைக் கம்பளம் விரித்தது போலாயிற்று.

அக் காலத்தில் பிதிர்த் தேவதைகள் அக்கினிக்கு அளிக்கப்படும் அவியில் பங்கு பெற்றிலர். அவர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பசு உண்ணும் பசும் புல்லினுள் நஞ்சூட்டினர்கள்.

இதையறியாமல் பசு நச்சுப் புல்லை உண்டுவிட்டது. உடனே அது நோயுற்றது. இருஷிகள் அதைக் கண்டு மனம் வருந்தினர்.

அவர்கள் இதைச் செய்தோர் யாராயிருக்கலாம் என்பதை ஆலோசித்துக் கொண்டிருந்தபோது பிதிர்த் தேவதைகள்நேரே தோன்றி, “நாங்கள் புல்லினுள் நஞ்சூட்டினேம் வேள்வியில் சொரியும் அவியில் எமக்கும் பங்கு வேண்டும்; என்பதற்காகவே இங்ஙனம்செய்தோம்”என்றனர்.

அப்பொழுது இருஷிகள் அக்கினிக்கு இரண்டாவது அவி இட்ட பின் மீதியைப் பிதிர்களுக்குத் தருவதாகச் சொன்னூர்கள்.

வாக்களிக்கப்பட்ட பின்னர் பிதிர்கள் பசுவின் பிணியைத் தீர்த்தார்கள். பூமியின் மேலிருந்த தாவரங்களைத்தினு மிருந்த நஞ்சுத் தன்மையை நீக்கி அவற்றை முன்னரிலும் சுவையுடையவையாகச் செய்தார்கள்.

இவ்வுண்மையை உணர்வோர் தானியங்களும் மூலிகைகளும் மிகச் சுவையுடையனவாகவும், தேக ஆரோக்கியமுடையனவாகவும் இருக்கக் காண்பர்.

இதன் பின்னர் இருஷிகள் “எங்கள் யாகத்துக்கு உன் அன்னையிடமிருந்து பால் கொண்டு வருக”எனக் கன்றைப் பசுவிடம்அனுப்பினர்.

“தயை கூர்ந்து எனக்கு ஓர் வரந்தருவீராக” என்று கன்று பதிலாகக்கேட்டது. இருஷிகள் “உன் வார்த்தைக் கேள்” என்றனர். கன்று ஈன்ற முதல் பத்து நாளும் பசுவில் பால் கறக்காதிருப்பீராக பின் காலையில் பாலைக் கறந்து கொண்டு கன்றைத் தாயுடன் உலாவித்திரிய விடுக. ஒருபோதும் அதைத் தாயிடமிருந்து பிரியாதிருப்பீராக” என்றது கன்று. இருஷிகள் அவ்வரம் கொடுத்தனர். எம்மவர் எத்தனை பேர் இதன்படி செய்கின்றனர்.

# கற்பின் சிறப்பு கண்ணகி வழிபாட்டுக்கு ஏது

—:o:—

1-ம் பக்கத்தொடர்ச்சி

“பெருநில மன்னன்
இருநில மடங்கலும்
பசியும் பிணியும்
பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்”குமாறு வாழ்த்தினர். சிவன் கோயில் ஆறுமுகன் ஆலயம், மற்றத் தேவர்கள் கோயில், நீலமேனி நெடியோன் கோயில் முதலிய வற்றிலெல்லாம் விதிவழுவாமல் விழாக்கள் நடந்தன. பாணர்கள் இசை பாடினர். அருகன் பள்ளியிலும், புத்தர் பள்ளியிலும் புண்ணியக் கதைகள் படிக்கப்பெற்றன. கோவலனும் மாதவியும் இதனைக் கண்டு மகிழ்வுற்றார்கள். மறுநாள் நீராடல் வேண்டி மக்கள் கடற்கரைக்கேகினர். கோவலனும் மாதவியும் கடற்கரையில் மரநிழலில்இருக்கையில், தோழியிடமிருந்து யாழைவாங்கி கோவலனிடம் கொடுத்தாள் மாதவி. அவன் கானல்வரி பாடினன். அது அகப்பொருளில் களவுத் துறையில் தலைமகன் கூறும் மொழிகளாக இருப்பது கண்டு, வேறு பெண்மேல் ஆசை உள்ளான் போலும் என ஐயுற்று, அதை வெளிக்காட்டாமல், யாழை வாங்கி தானும் வேறு குறிப்புடையாள்போல்

“நிலத் தெய்வம்
வியப் பெய்த நீள்
நிலத்தோர் மனம் மகிழ”

இன்னிசை பாடினள் மாதவி. இதனைச் செவியுற்ற கோவலன், வேறொருவன்மேல் மனம் வைத்துப் பாடினள் மாதவி என்று கோபமுடன் அவளைப் பிரிந்து தன மனைகேக, மாதவியும் தோழியுடன் துயருற்றுத் தன் மனைக கேகினள்.

கோவலன் தன் மனைக்கேகி கண்ணகியின் வாடிய மேனியையும், வருந்திய மனத்தையுங் கண்டு, ‘பொருளைவிரும்பும் பொதுமாதின் பொய் ஒழுக்கத்தை மெய்யென்று நம்பி மோசம் போனேன் பொருளெல்லாம் இழந்து வறுமையுறுகிறேன்” என்று கண்ணகியிடம்கூறினன். அதற்கு ‘ஐயனே, என்னிடம் இன்னும் இரண்டு காற் சிலம்புகளிருக்கின்றன. அவற்றை இதோ தருகிறேன்” என்று மகிழ்ந்துகூறினள். அச்சிலம்பை விற்று வரும் பொருளுதவியோடு வாணிகம் செய்யும் எண்ணத்தை அவளிடம் கூறி, அவளையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குப் போகப் புறப்பட்டான் கோவிலன். வழியில் கண்ணகி அளவிலாத் துன்பமுற்றாள். வெய்யிலாலும் கற்கள் கால்களை உறுத்துவதாலும் கஷ்டப்பட்டாள். வழியில் இளைப்பாறும் பொருட்டு சோலையொன்றில் தங்கி, அங்கு தவம் செய்து கொண்டிருந்த கவுந்தியடிகளை வணங்கினர். அவரும் மதுரை செல்ல விருப்புற்றாராதலின் இவர்களுடன் ;சென்றார். பகலில் வழிநடத்தல் கஷ்டமாயிருத்தலால் இரவில் வழிநடந்து மதுரையை அடைந்தார்கள். அங்கு கண்ணகியை கவுந்தியடிகளின் காவலில் விட்டு மதுரையைச் சுற்றிப் பார்த்து வந்து தான் கண்ட காட்சிகளைக் கவுந்தியடிகளுக்குக் கூறினன். கோவலனை அறிந்த மாடலன் என்னும் அந்தணன் கோவலனைக் கண்டு துயருற்று மதுரை நகருள் சென்று இருக்குமாறு கூறினன். அப்படிப் போகும்பொழுது ஆயர் குலப் பெண் மாதரி என்ற முது மகளைக் கண்டு கண்ணகியை அவளிடம் அடைக்கலப் பொருளாக விடுத்தார் கவுந்தியடிகள். மாதரியின் மனைசேர்ந்து நல்லுணவு ஆக்கி கணவனுக்குப் படைத்தாள் கண்ணகி. உணவருந்திய பின் கண்ணகியின் சீரடிச் சிலம்பு ஒன்றை எடுத்துக் கொண்டு அதை மதுரையில் விற்று வருவதற்கு வெளியேசென்றான். செல்லும் வழியில் தீச் சகுனம் கண்டும் அதைத் தீயசகுனம் என்று அவன் அறியவில்லை. கடைத் தெருவில் சிலம்பை விலை கூறிச் செல்லும் போது அரசனின் பொன் கொல்லன் இவனைக் கண்டு சிலம்பினைப் பார்த்து ‘இது அரசன் தேவிகளுக்கேயல்லாமல் வேறொருவருக்கு இசையாது. அரசனிடம் சொல்லி நான் திரும்பிவருமளவும் இங்குஇரும”என்று சொல்லி ஒரு குடிசையில் கோவலனை இருத்தி அரண்மனை சென்றான். வழியில் “நான் முன்னல் அரசனிடம் களவாடிய சிலம்பு என்பால் உளதென்று வெளிப்பட முன் அக்குற்றத்தை இவன்மேல் சுமத்திவிடுவேன். நல்லகாலம் வாய்த்தது”. என்ற கரவெண்ணத்துடன் அவன் போய் அரசனிடம் அரசதேவியின் சிலம்பு கவர்ந்த கள்வனைப்பற்றிக் கூறலும் “அரசமாதேவியின் காற்சிலம்பு கள்வன் கையில் காணப்பெற்றால் அவனைக் கொன்று அச் சிலம்பைக் கொண்டு வருக’ என்று அரசன் ஆணை செய்தான், கொல்லன் தன் எண்ணம் கைகூடுவதை அறிந்து ஏவலருடன் கோவலனிடம் சென்றான். ஏவலர் கோவலனைப் பார்த்து அவன் குற்றமற்றவன் என்று கூறினர். தட்டான் தன் புத்தித் திறமையால் அவனே கள்வன் என்று அவர்கள் நம்பும்படி கூறலும் ஏவலருள் ஒருவன் கோவலனை இருதுண்டாக வெட்டலும் அவன் மாண்டான்.

திருமாலை வழிபடச் சென்ற மாதரி கோவலன் கொலையுண்டதை அறிந்து வந்து ஆயர் குலப் பெண்களுக்குச் சொல்ல, பின் தன் தோழிமூலம் கண்ணகி அறிந்து அழுது புலம்பினள். தன் கணவன் கள்வன் அல்லன் என்று அசரீரியினல் அறிந்து தன் மற்றொரு சிலம்பைக் கையில் பிடித்து நகரில் புகுந்தாள். வழியில் வெட்டுண்ட கணவனின் உடலைக்கண்டு கட்டித் தழுவவும் அவன் உயிர் பெற்றெழுந்து விண்ணுலகு சென்றான். கண்ணகி அரசனிடம் சென்று வழக்குரைத்தாள்; அரசன் இரு சிலம்புகளையும் சோதித்துத் தன் பிழையை உணர்ந்து கோவலன் கள்வன் அல்லன் என்று கூறி, நீதி தவறியபின் தான் உயிருடன் வாழ்தல் தகாது என்ற எண்ணங்கொண்டு கீழே விழுந்து மடிந்தான். கணவன் இறந்தது கண்டு அரசமாதேவியும் இறந்தாள். அவ்வளவிலும் சீற்றம் தணியாத கண்ணகி,

“பாட்டாங்கி யானுமோர்
பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு
ஒழிப்பேன் இம்மதுரை”

என்று கூறி இடது மார்பைத் திருகி எறிதலும் அவள் முன் அக்கினித் தெய்வம் தோன்றி, “மதுரையை அழிக்கப் போகின்றேன். இந்நகரில் யாரைக் காப்பது. யாரை அழிப்பது” என்று கேட்க,

“பார்ப்பார் அறவோர்
பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி
எனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே
சேர்க”

என்றாள். அக்கினியும் அவ்வண்ணமே மதுரையை எரியூட்டினன்.

பின்னர் கண்ணகி சேர நாடு சென்று திருச்செங்குன்று எனும் மலைமீதேறி ஒரு வேங்கைமர நீழலில் நிற்றலும் விண்ணினின்று ஒரு விமானம் இறங்கியது. அதில் தன் கணவனைக் கண்டு களி கூர்ந்து அவ் விமானத்திலேறி விண்ணுலகடைந்தாள்.

கண்ணகி விண் சென்ற காட்சியைக் கண்ட குறவர் சேர அரசன் செங்குட்டுவனிடம் அறிவித்தனர். கண்ணகி சரிதத்தை தன் அவையில் உள்ள புலவன் சாத்தனார்மூலம் அறிந்து கண்ணகிக் கோயில் எடுக்க எண்ணினன் அது கால வடபுல மன்னர் தமிழரை இகழ்ந்தது கேட்டு மனம் பொறாது அவன் வடநாடு சென்று கனகவிசயரை வென்று இமயமலையில் கல்லெடுத்து வந்து பொற்புடைத் தெய்வத்துக்கு ஆலயம் செய்து வழிபாடு செய்து அருள் பெற்று இனிது வாழ்ந்தாள்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் குருபூசை விழா

( முற்றொடர் )

சிவபெருமான் திருவருள் பாலித்து நீயும் உன் பத்தினியும் உன்திருமணத்துக்கு வந்த எல்லோரும் எம்பால் வந்து சேர்கவென்று திருவாய் மலர்ந்தருளினர். சிவலிங்கத்திலிருந்துசோதி தோன்றக் கோயிலை உள்ளடக்கிச் சோதிலிங்கமாய் ஒருவர்சலைக் காட்டியது. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் கடவுளை வணங்கித் துதித்து அநாதி தொடங்கித் தம்மை வருத்தும் பிறவி நோயினின்றும் நீங்கி உய்ய விரும்புவோர்க்கு அந்நோயை நீக்கவல்ல பரம வைத்தியராகிய சிவபெருமானை உணர்த்தும் மந்திரம் ஸ்ரீபஞ்சாட்சரமேயாம். இப் பஞ்சாட்சரத்தைச் சிவன் மாட்டு இடையறாது வளரும் மெய்யன்பினல் மனங் கசிந்து ஓதுவோர் மூத்திபெறுவர்என்ற பொருள் தரும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப் பதும்
வேதநான்கினும் மெய்ப்பொருளாவதும்
நாதநாம நமச்சிவாயவே.

என்ற பதிகத்தைப் பாடியருளினர். அங்குள்ள எல்லோரும் பிறவிநோய் தீரும்படி அச்சோதியிற் புகுமாறு பிள்ளையார் பணித்தார். வந்தவர்கள் எல்லாரும் புகுந்தபின் நாயனர் காதலியைக் கைப்பற்றிக் கொண்டு பரஞ்சோதியுட் புகுந்து சிவத்தோடு இரண்டறக் கலந்து முடிவிலாப் பேரின்பமுற்றார். உடனே சோதியும் ஒடுங்கி முன்போலத் திருக்கோயிலாய் விளங்கியது. சோதியுட் புகாமல் தூரத்தில்நின்றவிண்ணவர்களும் முனிவர்களும் இந்த அற்புதத்தைக் கண்டு புகழ்ந்துபோற்றினர். தூரத்தே நின்ற சிலருக்கு அப்பேறு வாய்க்கவில்லை. அதனை இழந்து வருந்தினர்கள். “தவமும் தவமுடையார்க்காகு மவதனை —யஃதிலார் மேற்கொள்வது. என்றபா இங்கே சிந்திக்கற்பாலது. இத்துணைச் சீரும் சிறப்புமுடைய சம்பந்த சுவாமிகளை வழிபட்டுப் பெரியாரைப் பேணி அடியார்களை ஆதரித்து கடவுளைவாழ்த்தி வணங்கி அவர் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதத்தை நாமெல்லாம் அன்புடனேதினல் நாம் அஞ்சுவதியாதொன்று மில்லை —யஞ்சவருவதுமில்லை. அன்றியும் இம்மையினும் அம்மையினும் இன்பங்களைப் பெற்றுய்வோம்.

———

### காரைநகர்சிவகாமிஅம்பாள் ஜனசமூக நிலையப்பெயர் மாற்றம்

அண்மையில்நடைபெற்ற காரைநகர் சிவகாமி அம்பாள் சனசமூக நிலைய மகாசபையில் (மேற்படி நிலையம்) “ஸ்ரீ சிதம்பரேஸ்வர சனசமூகநிலையம்’ என அழைக்க வேண்டும் எனவும், தபால் விலாசங்கள் யாவும் தற்போதைய புதிய விலாசத்திற்கே அனுப்பவேண்டும் எனவும், ஷை நிலைய மகாசபையினராகிய நாங்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளோம் என்பதனைப் பொதுமக்களதும் அரசாங்கத்தினதும் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்” என்னும் பிரேரணை நிறைவேற்றப்பட்டு காரிய முகாமைச் சபையின் அங்கீகாரத்தையும் பெற்றது.

— கடித.


**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

**1918-ம்௵ ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன,

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்,

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

# விருந்தோம்பும் சிறந்த பண்பாடு

## வித்தில்லாது விளைவு தருமென்று விளம்பினர் வித்தகர்

திரு. ம. மருதலிங்கம்
சங்கானை

பன்நெடும் நாட்கள் பின்னிப் பழகிய இருவர்க்கிடையில் நடைபெறும் விருந்து விருந்தன்று. உற்ருர் உறவின் முறைகளைக் கண்டு அவர்க்கு அளிப்பது விருந்தன்று. அஃது பின் ஒருகால் தமக்கு இவ்வுலகிலேயே கிடைக்குமென்ற நம்பிக்கையின் பாற்படும் விருந்து.

தேர்தலில் வெற்றியீட்டியவர்கள் தம்மோடொத்தவர்கட்கு அளிப்பது விருந்தன்று. பரீட்சையில் தேறிய ஒரு மாணக்கன் தனது உடன் மாணக்கர்கட்கு அளிப்பதும் விருந்தன்று.

இஃது இவ்வாறெனின் விருந்தோம்பலின் திறன் என்னை, அஃது எத்துணைப் பண்பு வாய்ந்தது, பயனுடையது, சிறப்பும், தொன்மையும் செம்மையும் உடையது என்பதனை ஆராய்வாம், மக்கள் "இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" மக்கள் வாழ்வதே விருந்தினரைப் பேணி அவர்கட்கு உதவுதற் பொருட்டே என்ற பேருண்மையை உலகப் பொதுக் கவிஞன் வள்ளுவனர் நமக்கு எடுத்துக் காட்டுந் திறன் என்னே! இந்த ஒரு நல்ல பண்பாட்டைத் தழுவி தொன்மைத் தூயதோர் இன்பத் தமிழ்க் குடியிலே இல்லறத்தை இனிது நடாத்தும் மெல்லியலார் தம் அன்பிற்குரிய தலைவனுடன் தனது மனையகத்து வதியுங்கால் அன்னன் முன் செய் தவத்தால், அன்றித் தம் பெருமுயற்சியால் தான் "சாவா மருந்து" ஒன்றைப் பெற்று அம்மருந்தைத் தனது தலைவிக்குக் கொடுத்து உண்ணப் புகுங்கால், முன் ஓர் முறையும் அறியாப் புதியவர் ஒருவர் வருந்திய முகத்துடன், இளைப்புற்ற உடலுடன் மனையகப்புற வாயிலுள் நின்று இல்லத்தில் யாரும் இல்லையா என்று மெல்ல உரைத்தார். இம்மொழி சாவா மருந்தை உண்ண எடுத்த தலைவன் தலைவியின் செவிக்கெட்டிற்று; தலைவி இங்கு யாரும் இல்லை என்று உரைத்திலள், அன்றித் தலைமகன் எழுந்து சினந்து அவனை வெருட்டவில்லை. இருவரும் உடன் எழுந்து மாடத்து வாயிலை அடைந்து வந்த புதியவரை இன்முகத்துடன் இனிது மாடத்துள் அழைத்துச் சென்று, அமரச் செய்து தாம் முன் உண்ண எடுத்த "சாவா மருந்தை" அவர்க்கும் பகிர்ந்து உண்பித்த பின்புதான் அவர் யார்கொலோ! இவண் போந்த காரணம் என்கொலோ! என ஆய்ந்த செம்மை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் நிலவிய தமிழ் நாட்டில் கண்ட உண்மை. இச்சிறந்த பண்பாட்டின் தன்மையை அன்று வாழ்ந்த கவிஞன் கண்டு மகிழ்ந்து வருங்கால மக்களும் அவ்வழி நின்று எல்லார்க்கும் பயன்படவேண்டும் என்ற பேரவாவுடன் எமக்கு எடுத்துரைத்தார்.

"விருந்து புறத்ததானுண்டல் சாவா —
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"

இத்துணைச் சிறப்புடையர் வாழ்க்கை என்றும் செழிப்புடையதாக, செம்மை நிறைந்ததாக, அன்ருது செல்வம் சுருங்காது மேன்மேற்கிளைக்குமென்பதாம். அன்று ஓர் இளங்காளை வீரத்திற் சால்புடையோன், அஞ்சாது அறன் உரைக்குந் திண்மையுடையோன், பன்னெடுந்தூரம் வழிமாறி நடந்து, இளைப்புடன் செல்கிருன். வீதியின் இருமருங்கும் நீண்டு உயர்ந்த நெடிய சோலைகள்; செந்நெற் கழனிகள்; இன்னும் பல சிறந்த காட்சிகள் அன்னுர் களைப்பைச் சிறிது நீக்கின. ஆனல் அவன் நெடுவழி நடந்து கால்கள் சோர்வடைந்தான்; தேடிச் சென்ற இடமறியாது உளம் வாடினன். என் செய்வான் அயராது நடந்து கொண்டே செல்கின்ருன். அவன் நடந்து கொண்டிருக்கும் நாட்டு மக்களது மொழி வேறு, நடந்து கொண்டிருப்பவனது மொழி வேறு. உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்தின் துணைகொண்டும், சிறிது அந்நாட்டு மக்களது மொழி வழங்குங்கால் காணப்படும் அபிநயக் குறிப்பினலும் செல்வானயினன். நெறிவழி நடந்த இடுக்கண் முதலியவற்ருல் தளராத உள்ளத்துடனும், ஊக்கத்துடனும் செல்கின்ருன். அவனது ஊக்கமே அவன் தேடிச் செல்லுங் குறிப்பைக் காட்டிச் செல் செல்லும்.

"ஆக்கம் அதர்வினய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையானுழை" காலை முதல் பகலவன் உச்சிக் கண் நாடும்வரை வழிதேட நடந்துகொண்டே இருக்கின்ருன். அன்னவன் உடற் சோர்வு என்னே! உளச் சோர்வு என்னே! தம்மொழியிற்பேசி வழி அறியாத் தன்மை என்னே! தன் இனத்தார் யாரும் இல்லாத அப் பெருநாட்டில் அன்னன் தனிமை என்னே! இத்துணைப் பேரின்னல்கள் அன்னவன் உள்ளத்தை உறுத்தின; அப்பொழுதும் எல்லாம் உடையவன் என்று உரைக்குந் தன்மைத்தாய ஊக்கத்துடன் செல்கிருன்.

"உடையார் எனப்படுவது ஊக்கம்" பன்னிப் பன்னிப் பின்னும் பலகால் நடந்துதான் தேடித் தேடிச் சென்றிளைத்த துணைவன் இல்லம் இதுவாய் இருக்கலாம் என்று ஐயுறு நிலையில் பல்லோர் சொல்லிய குறிப்புக்கள் பல மின்னுவதைக் கண்டு அம்மாடியின் வாயிற்புறத்தை அடைந்தான். உச்சிப் பொழுதாகையால் மாடியின் மனையகத்துத் தாயானவள் மடைப்பள்ளியுள் அமைந்திருந்தாள்; இல்லில் யாரும் இல்லையோ என்ற ஐயத்தால், முன்பின் அறியாத அயலார் வீடு அதனினும் தம் இனமிலா ஒரு நாட்டில் தம்மொழி பேசவழி இலாத் தனிமையான நிலைமையில் எத்துணை அச்சத்துடன் மாடியின் வாயிலில் நின்று ஆங்கில மொழியால் அழைத்தான்! ஆங்கிருந்த தாயானவள் வாயிலை வந்தடைந்தான். இன்முகத்துடன் தம் மொழியில் அன்புடன் உள்ளே அழைத்தாள். பஞ்சணைப் பீடத்தில் அமரச் செய்தாள், தான்தேடும் துணைவன் உறைவிடம் இதுதான என்று கேட்டான் இளைஞன். அப்பொழுது அன்னையின் இளைய மைந்தனும் அங்குற்ருன். அப்பொழுது மைந்தன் என் செய்தான் அந்நாட்டுக்குப் புதியவன், இனத்திற்கு வேற்றுமையுடையான, அந்நாட்டு மொழி தெரியாத் தன்மையாளன் என்று அவன்மீது சினந்து அவனை அப்பால் அனுப்ப எண்ணினன? இல்லை புதிய காளை ஒருவரைக் கண்ட உளக் களிப்புடன் என்ன வேண்டுமெனக் கடாவுவானயினன். இளைஞன் தேடிச் சென்ற துணைவன் இல்லம் அப்பகுதியிலேயே இல்லை என அறிந்து இளைஞன் மெல்லச் செல்ல எழுந்தான். விட்டான அந்த இல்லத்துப் பண்புடை மைந்தன். நாட்டிற்குப் புதியன் இனத்திலே வேறுபட்டவன் அந்நாட்டின் மொழி தெரியா அன்னியன் முன்பு முகந்தெரியாப் புதியவன் என்ற வேற்றுமையால் வந்தவனை வாளாவிடுத்தான? இல்லை உள்ளம் நிறைந்த அன்புடன் இளைஞனை இன்றிருந்து நன்னீராட்டி நண்பகல் உண்டு பின் ஏகலாம் என்ற அன்புச் சொல்லால் இனிதே பணித்தான். பன்முறை பணிந்து ஆர்வத்தோடு பணிந்தான். இஃதன்ருே விருந்தோம்பல். மைந்தன் மாட்டிருந்த விருந்தோம்பலை எண்ணும்பொழுது அந்நாட்டின் விருந்தோம்பலின் பண்பறிந்து ஒழுகல் என்னுந் தன்மை நன்கு புலனுகும்.

இன்ன பிற தன்மைகளையுடைய மக்களது விளைநிலம், வித்தில்லாதுதானே விளையுமென்றும் வித்தில்லாதென்புழி சிறிது வித்திட்டாலும் அதுபெருகி விளையுமென்றும் அதற்குக் காவல் வேண்டாது காக்கப்படுமென்றும் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த உலகப் பொதுக் கவிஞன் எடுத்துக் கூறும் சிறப்பென்னே!

—


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் காரைநகர் வடக்கு வலந்தலை வீ. வேலுப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மீட்கப்படாது இருக்கும் இதன்கீழ் விபரிககப்படும் நகைகள் 1956-ம் ஆ. ஆடி மீ 9-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

| இல | திகதி | கொடுத்த ரூபா | ஊர் பெயர் நகைவிபரம் |
|---|---|---|---|
| 1517 | 26-11-54 | 40 – 00 | காரைநகர் விக்காவில் பொன்னர் குமரேசு மூன்றுசோடி கடுக்கன், காய்முத்து. |

M. 299 15-6-

வை ஏரம்பமூர்த்தி
Auctioneer.

## தஞ்சை வாணன் கோவை

### சொக்கப்ப நாவலர் உரை

பொய்யாமொழிப்புலவர் பாடிய தஞ்சைவாணன் கோவைக்குப் பேர் பெற்ற பழைய உரையாகிய குன்றத்தூர் - அஷ்டாவதானி சொக்கப்பநாவலர் உரை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் குறிப்புரையுடன் யாழ். சைவபரிபாலனசபையார் வெளியிட்ட முதலாம் பதிப்பினைப் பலர் அறிவர். அதனை, பின்னர்க் கிடைத்த ஏட்டுப் பிரதிகொண்டு பரிசோதிப்பித்துத் திருத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர். அது தமிழிலக்கண இலக்கியங் கற்போருக்கும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பால பண்டித பரீட்சை, மதுரைத் தமிழ்ச் சங்கப் பால பண்டித பரீட்சை, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பரீட்சை, அண்ணுமலைப் பல்கலைக்கழகப் புலவர் பரீட்சை ஆதியவற்றிற்குக் கற்கும் பரீட்சார்த்திகளுக்கும் பெரிதும் பயனபடக்கூடியது. நாற்கவிராஜ நம்பியகப்பொருளுரையில் இக் கோவைச் செய்யுள் முழுவதும் உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தலின், அவ் விலக்கணங் கற்போருக்கும் பெரிதுப் பயன்படுவதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவைக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று அறிஞராற் பாராட்டப்படுவது தஞ்சைவாணன் கோவையே. அதற்குச் சொக்கப்பநாவலர் இயற்றிய உரை அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் பிறவற்றையும் தெள்ளிதின் விளக்குந் தன்மைவாய்ந்து, அக்கோவைக்கு ஓர் அணிகலன்போலத் திகழ்வது என்பது அறிஞர்கருத்து. அங்ஙனஞ் சிறந்து விளங்கும் அக்கோவையின் செய்யுட் கருத்து உரைக் கருத்துக்களை மயக்கமற இலகுவாக விளங்கிக் கற்றற்குச் சாதகமாக வித்துவான் அவர்கள் எழுதிய குறிப்புரை பரீட்சார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன் தரத் தக்கது என்பது இதன் முதற்பதிப்பினல் அறியக் கூடிய தொன்ருகும்.

இப் புத்தகம் பெறவிரும்புவோர் எம்மிடத்தும், பிரபல புத்தக வியாபார ஸ்தலங்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாகும்.

விலை ரூபா : 6 – 00. வியாபாரிகளும், தொகையாக வாங்குவோரும் உரிய கழிவுடன் விலைக்குப் பெறலாம்.

மனேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

### விலைக்கிருக்கின்றது

ஏறக்குறைய பத்து அந்தர் ஈயம் (பழைய அச்செழுத்து) விலைக்கிருக்கின்றது. விற்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

வண்ணர் பண்ணை சைவப்பிரகாச அச்சு யந்திரசாலையில் பார்வையிடலாம்.

மிகக் கூடிய கேள்வியாயிருந்தபோதும் எந்த ஒரு கேள்வியையும் ஏற்கவேண்டுமென்னும் கட்டுப்பாடு அச்சகத்தாருக்கு இல்லை.

## மொழிபற்றி அரசாங்க உத்தியோகத்தர் தீர்மானம்

அரசாங்க உத்தியோகத்தர் சங்கம் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டமைபற்றி ஆலோசித்துப் பின் வருமாறு தீர்மானஞ் செய்திருக்கின்றதாம்.

ஆங்கிலம் அரசகரும மொழி என்ற ஒழுங்கின்படியே இப்பொழுது அரசாங்க சேவையிலுள்ளோர் யாவரும் தங்கள் பதவிகளைப் பெற்றனர். இப்பொழுது சிங்களம் அரசகரும மொழியாக மாற்றப்பட்டிருப்பதால்சேவையிலிருந்து நீங்க விரும்புவோருக்கு நீங்கும் உரிமை கொடுக்கப்படுதல் வேண்டும். அவர்களுக்கு வழக்கமான உதவிப் பணத்துடன் உத்தியோக நட்டப் பணமும் கொடுக்கப்படுதல் வேண்டும், அரசாங்க சேவையில் தொடர்ந்திருக்க விரும்புவோருக்குச் சிங்களமொழி அறிவின்மையால் எவ்வித பாரபட்சமுமில்லாது உத்தியோக உயர்வு முதலியவை கொடுக்கப்படுதல் வேண்டும். வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இவர்களுக்கெதிராக அரசாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது.

இதன் பின் இத் தீர்மானத்தை எதிர்த்துத் தனிச் சிங்களத்துக்கு ஆதரவு கொடுத்து சிங்கள உத்தியோகத்தர் கையெழுத்துகள் வாங்குகிறார்களாம்.

— - —

### சைவப் பிரசங்கம்

மயிலிட்டி தெற்கு ஞானவைரவராலயத்தில்வைகாசி ௴ 30 ந் திகதி தொடககம் பத்துநாட்களாய் விசேட அலங்காரத் திருவிழா நடைபெற்றன. இப்பதது நாட்களும் பண்டிதர் திரு. இ. நமசிவாய தேசிகர், பண்டிதர் திரு. வ. முத்துக்குமாரு, ஸ்ரீ கணேச தேசிகர், அராலி திரு. வே. கந்தையா முதலானோர் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்கள். பின் இறுதித் திருவிழாவில் செந்தமிழ்த் திருநெறிக் கழகச் சார்பாக அகிலஇலங்கைச் சிவனடியார் சங்கச் செயலாளர் திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் "குருலிங்க சங்கமம்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

புங்குடுதீவு தற்போது வண் கிழக்கு நாவலர் றேட்டில் வசிக்கும் கந்தப்பு சின்னத்துரை

வழக்காளி.

இல 10825

எதிராக

புங்குடுதீவு கிழக்கு பொன்னம்பலம் தம்பிப்பிள்ளை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10825ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பினனுல் விபரிக்கப்படும் ஈட்டுரித்து என்னால் 1956ம் ௵ ஆடி ௴ 7ம் திகதி சனிககிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் கீழ்க்காணும் முதலாம் காணிக்கருகாமையில் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி. ரூபா: 1370 ம் ரூபா 1000 க்கு 18-2-54 தொடககம் 19-8-55 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும்.

ஈட்டுரித்து விபரம்

1950ம்௵ மார்கழி ௴ 30ம் திகதி நொததாரிஸ் எஸ் இரத்தினசிங்கம் முகதாவில் 2098ம் இலககததில் புங்குடுதீவு மேற்கு பொன்னம்பலம் சதாசிவம் ரூபா 1440 க்கும் 15 வீதமான வட்டிக்கும் எழுதிக்கொடுத்த ஈட்டுறுதியில் உள்ள சகல நயம் உரித்து சோந்தை முழுவதும். அவ் ஈட்டுறுதியால் கீழ்க்காணும் ஆதனங்கள் ஈடுவைக்கப்பட்டுள்ளன.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக் கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "நந்தி குண்டு" பர. நீ, இல. (11) பதினொன்று எல்லை கிழக்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனமும் வடக்கு துரையப்பா பெண் கனகம்மாவிற்குரியவாதனம் மேற்கு அருணசலம் சின்னத்தம்பிக்குரியவாதனம் தெற்கு ஒழுங்கை. இதடங்கலும்.

(2) ஷை புங்குடுதீவு மேற்கிறை "கொல்லதீவுக்குக் கிழக்கு" பர. நீ, இல 50 எல்லை கிழக்கு சின்னையா கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். வடக்கு விதையாநிலம் மேற்கு கார்த்திகேசு பெண் பொன்னுச்சிக்கும் பங்காளருக்குமுரியவாதனம். தெற்கு கார்த்திகேசு ஆறுமுகத்திற்கும் பங்காளருக்குமுரிய வாதனம். இதிற் சொரியலாய்ப் பர. நீ இல. இருபத்து நாலு அல்லது 12/25 பாகம்.

1956ம்௵ வைகாசி ௴ 15ம் திகதி

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

M. 306 22 6 56. து 300

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய் சிவக்கொழுந்து இராசேந்திரம்

வழக்காளி

இல. M. B. 246

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு
1 செல்லையா கைம்பெண் கண்ணம்மா
2 செல்லையா நடராசா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 246ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1956 ௵ ஆவணி ௴ 9 உ வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்குஇறை ஒற்றைப் புளியடி பர நில இலா 27/16 வீடும் கிணற்றுப் பங்கும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் இதில் மேற்குப் பக்கமாக பர. நில. இலா. 1 ல் மேற்கில் நிந்தமான குளி 12 க்கு எல்லை கிழக்கு மிகுதியான பாகம் செ. நடராசா பெண் இளைய பிள்ளையம்மாவுக்குடையது. வடக்கு ஒழுங்கை. மேற்கு ஐயாத்துரை பெண் தையலம்மாவின் ஆதனம். தெற்கு மீரு மொய்டீன் காதர் மொய்டீனுக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

51 4ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்
18-6-56

(M 302 22-6-56. து 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1, காரைநகர் சுப்பிரமணியம் காசிநாதர்
2. ஷையூர் பெண் இராசம்மா

வழக்காளிகள்

இல. MB/333

எதிராக

மானிப்பாய் கந்தையா செல்வநாயகம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/333 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956௵ ஆடி ௴ 10ம் உ செவ்வாய்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அநதக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 4250 - ம் ரூபா 2500-க்கு 29-6-55 தொடககம் 29-9-55 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 191 - 22 சதம்.

### காணி விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று மண்டைதீவு இறை "ஊர்க் கணக்கன் வயல், ஊர்க் கணக்கன் வயலுக்கு மேற்கு, ஊர்க் கணக்கன், ஊர்க்கணககன் வயலுக்கு கிளக்கு. சதவை, ஓடை சதவை, அலிகாடு தாமரை கடவையும் கணக் கொம்பனும்" இன்னும் கரி ஓம்பனும் கூகை மாவடி என்றும் சொல்லப்படும் காணி. பர. நெ இல. 299¾ லும் பர.நீ,இல. 523 குளி 7 3/4 லும் இருபிரிவுகளும் சேர்ந்து பர. நீ, இல, 723 குளி 7 3/4. இதில்தெற்குப்பக்கத்தில் பர. நீ இல 100 பிறநீங்கலாக மிகுதி பர. நீ. இல. 623 குளி 7 3/4 இந்த வடபாகம் பர. நீ. இல 623 குளி 7 3/4 லுக்கும் எல்லை கிழக்கு கடல், வடககு தரவை நிலம். மேற்கு தரவை நிலமும் குமாரசுவாமிக்கும் கதிரவேலு சண்முகத்திற்கும் கதிரவேலு நடராசாவிற்கும் நாகநாதர் குளந்தைவேலுவிற்கும் உரிய ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை நாகேந்திரருக்கும் கிருட்டினர் தனஞ்செயத்திற்கும் உரிய ஆதனங்கள்.

1956ம்௵ வைகாசி ௴ 30ம்திகதி

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

M 305 22-6 (து 300)

## மொழிபற்றி யாழ்ப்பாண மேற்றிராணியார்

தனிச் சிங்களச் சட்டம் பற்றி யாழ்ப்பாண மேற்றிராணியார் அதி வண. கலாநிதி எமிலியானுஸ் பிள்ளை அவர்கள் தமது கருத்தை வெளியிடும்பொழுது பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

தனிச்சிங்கள மொழிச் சட்டத்தில் எங்கள் வெறுப்பைத் தெரிவிப்பதற்காகக் கிறிஸ்தவ சங்கம் ஓர் விசேட கூட்டத்தைக் கூட்டியிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எங்கள் வாழ்வுடன் சம்பந்தப்பட்டு எங்கள் முன்னேற்றத்துக்கவசியமான மொழி உரிமையைப் பாதுகாக்க வேண்டியது எங்கள் கடனாகும்.




# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 24—6—56 —— 30—6—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

உம்முடைய கருமங்கள் பலவற்றல் இந்தவாரம் தெளிவான திருத்தமுண்டாகும், தனலாபங்கள பெறுதல் போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தனலாபம் நிச்சயம். ஆனல் ஞாயிறும் திங்கள்காலையும் கவனமாய்க் கழிக்கவும். இனத்தவர்கள் உமககுச் சிறிது கோபமுண்டாக்ககூடும். மிகுதி வாரம் நல்லாயிருக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

இந்தவாரம் சித்தி பெறுதற்கு நீர் மிக முயன்றுழைக்க வேண்டும். திங்கள் பிற்பகலும் செவ்வாய் புதனும் தொந்தரவானவையாயிருககும், மிகுதி வாரம் ஒரு அளவுக்குக் குற்றமில்லாமலிருக்கும். ஆனல் மனச் சமாதானமிருக்கமாட்டாது.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

பணத்துறையில் நல்ல வாரம். புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரும். நடைமுறை அலுவல்களில் சில மாற்றங்களுக்கிடமுண்டு. புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி தொந்தரவானவையாயிருக்கும் சண்டைகளையும் வாக்குவாதங்களையும் தவிர்க்கவும் வார இறுதி திரும்பவும் நன்றாகும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம் 1ம் பாதம்.

வெள்ளி பிற்பகலும் சனியும் தவிர இந்த வாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், புதுமுயற்சிகளில் சித்தி நிச்சயம். வார இறுதியில் இனத்தவர்கள் உமக்குச் சில துன்பங்களை உண்டாக்குவர்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இந்த வாரம் இலாபங்கள் நிச்சயம். சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். உத்தியோக சித்திக்கும் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தேகசுகம் இந்த வாரம் அதிகம் நல்லதாயிருக்கமாட்டாது கண் நோய்களுக்கிடமுண்டு புது முயற்சிகள் பின் போடப்பட வேண்டும். பிதாவழி இனத்தவர்களால் தொந்தரவுகளுக்கிடமுண்டு. ஆனல் வாரஇறுதியில் இலாபங்கள் நிச்சயம்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

மாதாவழிஇனத்தவர்கள் இந்த வாரம் உமக்குச் சில தொந்தரவுகள் உண்டாக்ககூடும். கந்தோர் நிலைமைகளும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டா. மனத் துன்பங்களுக்கும் நடைமுறை அலுவல்களில் மாற்றங்களுககுமிடமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

இந்த வாரம் குடும்பச் சூழலில் நிலைமைகள் சிறிதும் நல்லாயிருக்கமாட்டா. பிழை எண்ணங்களுக்கும் சண்டைகளுக்குமிடமுண்டு, வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். பணத் துறையில் நல்ல வாரம்,

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

நீர் இந்த வாரம் சண்டைதொடுகக முந்துவீர். பெண்ணினத்தவர் சில தொந்தரவுகளுக்குக் காரணராயிருப்பர். பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்லவாரம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உம்முடைய மனம் இந்தவாரம் அமைதியாயிருக்கமாட்டாது. ஆனல் பணத் துறையில் நல்ல வாரம். சிறிது காலத்துக்கு உம்முடைய எல்லா முயற்சிகளிலும் கவனமாயிருக்கவும் வார இறுதி சில வினோதங்களை உண்டாக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

ஒரு தொந்தரவான வாரம். வரவு செலவு சமாளிக்கமாட்டாது வருந்துவீர், இனத்தவர்களுடன் சண்டைகளுக்கும் குடும்பச் சூழலில் குழப்பங்களுக்கும் இடமுண்டு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல. 11016

1. வேலுப்பிள்ளை பொன்னையா காரைநகர் கிழக்கு (காலம் சென்றவர்)
2. P. வேலுப்பிள்ளை
3. பொன்னையா மயில்வாகனமும்
4. பொன்னையா ஆறுமுகமும் பெரியகடை, யாழ்ப்பாணம்.
— வழக்காளிகள்

எதிர்

வயித்திலிங்கம் குமசாமி
வல்வெட்டித்துறை
எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 11016 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஞு ஆவணி மீ 4 ம் உ சனிக்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாழ்ப்பாணம்சுண்டிக்குளியில் தோப்பு வளவு என்னும் காணி நீ. இ. 3 கல்வீடும் கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

எல்லை கிழக்கு S. R. செல்லம்மா N. பொன்னம்மா K. சோமசுந்தரம் இவர்களின் ஆதனங்கள்,

வடக்கு S. தம்பிராசாவின் ஆதனம்.

மேற்கு J. T, சலமனும் பெண் ராசம்மாவின் ஆதனம்.

தெற்கு ஒழுங்கை முகப்பும் கை ஒழுங்கையும்,

இவை அடங்கலும்.

இந்த ஆதனம் 1951ம் ஆண்டு மார்கழி மாசம் 5ம் திகதி பிரசித்த நொத்தாரிசு V. சிவசுப்பிரமணியத்தால் 1835 ம் இலக்கத்தில் ரூபாய் 6000/- க்கு முடிந்த முதலாம் ஈட்டுக்கு அமைவாக.

வ. அ. துரையப்பா,
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
18-6-56.
M. 301. 22-6- (த. 100



## கோட்டு விற்பனவு விளம்பரம்

———

கோப்பாய் தெற்கு
இளையதம்பி சிவரெத்தினம்
வழக்காளி.

இல. 11147

எதிராக

இருபாலை
நாகலிங்கம் அருளம்பலம்
சுண்டிக்குளி
சபாரத்தினம் தியாகராசா
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11147 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் சட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1956 ஞு ஆவணி மீ 9 உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

(1) இருபாலை இறை "சுருக்கன் திடல் பர. கிலே. இலா 20. பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும் மேற்கெல்லை வேலியில் இருக்கும் வான் பயிர்களிலும் கிணற்றிலும் பங்கு. எல்லை கிழக்கு நெல்லைநாதன் கைம் பெண் வள்ளியம்மைப் பிள்ளையின் ஆதனம். வடக்கு சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம் மேற்கு ஒளுங்கை. தெற்கு ஒழுங்கையும் கந்தையா நாகலிங்கத்தின் உருத்தாளரின் ஆதனமும் இதில் சொரியலாக நாலில் ஒரு பங்கு.

(2) இருபாலை இறை 'பேபுவாணி" பர. கிலே. இலா 8. வீடும் கிணறும் பனைகளும் வான் பயிர் செய்பயிர்களும் கிழக்கும் மேற்கும் தெற்கும் ஒழுங்கைகள். வடக்கு கந்தையா நாகலிங்கத்தின் உருத்தாளரின் ஆதனம் இதில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு.

சே. இரத்தினசபாபதி
கொமிஷனா.

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
18-6-56.
M 303 22-6 (த 200)


## சிங்கள ஆசிரியர்கள் மாத்திரமே

———

கல்வி மந்திரி ஸ்ரீ டபிள்யு தகநாயக 3100 சிங்கள ஆசிரியர்களுக்கு உடனே இடங் கொடுத்தற்கு வேண்டிய அதிகாரத்தை மந்திரி சபையிடம் பெற்றிருக்கின்றாராம். போதிய தமிழ் ஆங்கில ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்; ஆனல் சிங்கள ஆசிரியர்களின் தொகை போதாது. ஆகையினலே சிங்கள ஆசிரியர்கள் மாத்திரம் எடுக்கப்படுகின்றனர் என்பது இத் தொடர்பில் அவர் கொடுக்கும் விளக்கமாகும்.


## அருணகிரிநாதர் குருபூசை

———

நாள்: ஆனி மீ ௧0 ந் திகதி (23-6-56) சனிக்கிழமை

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

6-30 – 7 கடவுளாராதனை

7—8 திருப்புகழ்ப் பாராயணம்

திரு. சி. தருமலிங்கம்
8—9 பிரசங்கம்
'அருணகிரிநாதர்'

திரு. பொ. அப்புக்குட்டி

சைவ பிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 19-6-56, (து. 150)


# சபாபதி நாவலரின் சிறந்த தொண்டு

1-ம் பக்கத் தொடர்ச்சி

மதுரைத்திருஞானசம்பந்தராதீன சந்நிதானமாகிய ஞானசம்பந்த தேசிகர் மகாவித்துவான் என்னும் விசேடணத்தோடுசேர்த்துக்கூறி ஆசீர்வதித்தனராகவும், யாழ்ப்பாணத் தமிழ்ச் சொரூபம் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் கூறியுள்ளார்கள். திருவாவடுதுவையாதீனத்திலே பெருமுனிவராய் இருந்த சிவஞான சுவாமிகள் அருளிய, திராவிடமாபாடியம் ஒன்றுளது. அப்பிரதியைச் சபாபதி நாவலர் சுப்பிரமணிய தேசிகரிடம் அன்போடு பெற்றுப் படித்தனர்.

இவர் நீண்டகாலம் தமிழ் நாட்டில் இருந்து பலசொற்பொழிவுகளைச் செய்தும் கட்டுரைகளை எழுதியும் நூல்கள் இயற்றியும் தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றியுள்ளார்கள். தமிழ்நாட்டு ஆதீன மடாதிபதிகள் எல்லோரும் இவரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். இராமநாதபுர பாஸ்கர சேதுபதியவர்களும் இவரிடம் பெருமதிப்புமுடையவர்கள். இதனை நாவலருக்கு சேதுபதி எழுதியகடிதங்களில் "சைவசிகாமணியாயும் பரசமய கோளரியாயும் விளங்காநிற்கும் கனம் நாவலர் அவர்களுககு எனப் பாராட்டிக் கூறியதுப் புலவர் சரிந்திர மூலம் அறியக் கிடக்கின்றது.

இவர் இயற்றிய நூல்கள் யேசுமத சற்கற்ப நிராகரணம், சிதம்பரசபாநாத புராணம், சிவகர்ணமிர்தம், பாரததாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், சதுர்வேததாற்பரிய சங்கிரகம், யமகவந்தாதி, மாயையந்தாதி, திராவிடப் பிரகாசிகை, சமயம் முதலிய நூல்களாகும். இன்னும் நல்லைச் சுப்பிரமணிய பதிகம், வைதீக காவிய தூஷணமறுப்பு என்பனவும் பிறவுமான பதிப்பு நூல்களும் உண்டு.

இவற்றுள் சமயம் என்னும் நூலில் 22-ம் பக்கத்தில் சபாபதிநாலவர் கூறும் ஒரு பந்தியையும் இங்கே காட்டுதும். "இனிப்புத்தர், ஆருகதர், சாககியர், மீமாஞ்சகரும் பிறரும் நித்தியாநித்திய பதார்த்த இலக்கணங்களும் பந்தமுத்தி இலக்கணங்களும் உண்மையாக அறியமாட்டாத நாஸ்திகர்களேயாயினும் அவரெல்லாம் நான்கு பூதங்களுக்கு மேலாகச் சூக்கும பதார்த்தங்க ளுண்டென்று நிச்சயிக்க வல்லவராதலாலும் உலோகாயதர் நான்கு பூதங்களுக்கு மேலாகச் சூக்கும பதார்த்தங்க ளுண்டு என்று நிச்சயிக்க வல்லராதலாலும் அறிவுடையோர் உலோகாயதரையே நாஸ்திகரென்று பெரும்பான்மைபடவழங்குவாராயினரென்றுணர்க."

ஆகவே நாவலர் கூறிய இவ்வாக்கியங்களில் இருந்து நாம் அறியக்கிடப்பது இப்போது நம் தமிழ் நாட்டில் பரவும் பௌத்த மதங்ளும் அறிவுடையோர் கருத்தில் நாத்திக மென்றே கூற வேண்டியிருக்கிறது. இதனைப் பெரியோர்கள் உய்த்துணர்வார்களாக.

சபாபதி நாவலருக்கு ஞாபகார்த்த மண்டபம் ஒன்றுஅமைக்கும்படி செய்யும் தொண்டிற்கு சைவர்கள் எல்லோரும் உதவி அளிக்க வேண்டும். இவரது திருநாளை ஆனி மாதம் 14-ந் திகதி வரும் அவிட்ட நட்சத்திரத்தில் சைவச் சபைகளும், மற்றும் சமுகச் சபைகளும் கொண்டாடி மகிழ்தல் சாலச்சிறப்புடைத்தாம்.

———

## அரசியல் அலை

1-ம் பக்கத்தொடர்ச்சி

எத்தனைபேர் கொல்லப்பட்டார்கள், எத்தனை பேரை இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை, எத்தனைபேர் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பேர் உள்ளவற்றையெல்லாம் கொள்ளைக் கூட்டத்தாரால் கொள்ளைகொள்ள விட்டு ஓட்டாண்டிகளாயிருக்கின்றார்கள். இந்த விபரங்களை யார் தருவார்கள்?

———


# கம்பராமாயணம்

(யுத்த காண்டம்)

## கும்பகருணன் வதைப்படலம்

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

------- யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வெளியீடு -------

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், **க. வேந்தனர் அவர்கள்** எழுதிய
**விளக்கவுரையுடன் விரைவில் வெளி வரும்.**

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டேள்ளது.

**இத்துடன்,**

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.


**மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.**

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் சிரு. சப்பையா பொன்னையபலம் சர்மயா அவர்களால் 22 6-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.